# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 115/மா/2022**
**நாள் : 12.9.2023**

திரு. S. திருஞானம்,
சென்னை – 600 001. – முறையீட்டு மனுதாரர்

செயற் பொறியாளர்,
மண்டலம் - 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 021. – எதிர்மனுதாரர்

பெருநகர சென்னை மாநகராட்சி, சௌகார்பேட்டை, திருப்பள்ளித் தெரு, எண்.51/81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. திருஞானம் என்பவரின் 31.07.2022 நாளிட்ட மனு, 02.08.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 115/மா/2022 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

பெருநகர சென்னை மாநகராட்சி, சௌகார்பேட்டை, திருப்பள்ளித் தெரு, எண்.51/81 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S. திருஞானம் என்பவரின் முறையீட்டு மனுவில்,

புதிய கட்டிட அனுமதிக்கு விண்ணப்பிக்கும் போது, இரண்டாவது முழுமை திட்டத்தின்படி, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி ஒரு சில சாலைகள் விரிவாக்கம் செய்யப்படவேண்டுமென்று, சென்னை மாநகராட்சிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ல், கோட்டம்-49 முதல் 63 வரையிலான புதிய கட்டிட அனுமதி பெற்ற கட்டிட உரிமையாளர்கள் தாங்கள் தானமாக கொடுத்த சாலை விரிவாக்கத்திற்கான இடத்தை ஆக்கிரமித்துள்ளனர். சாலை விரிவாக்கத்திற்கு போக மீதமுள்ள இடத்தில் சென்னை மாநகராட்சி கட்டிட அனுமதிக்கு மாறாக வரன்முறை மீறி மற்றும் விதிகளை மீறியும் கட்டிடம் கட்டிள்ளனர்.

மேலும், இக்கட்டிடங்களின் மீது சென்னை மாநகராட்சி அதிகாரிகள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதற்கு பதிலாக முறையற்ற முறையில் வருமானம் பெற்றுள்ளனர்.

தானமாக பெறப்பட்ட இடத்தை இதுநாள் வரையில் அதிகாரிகள் சுவாதீனம் எடுக்கவில்லை. மேலும், சாலை மேம்படுத்துவதற்காக கட்டிட உரிமையாளர்களிடம் கட்டணம் வசூலித்துள்ளனர். மேலும், தானமாக பெறப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பை அகற்ற எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கீழ்காணும் கட்டிடங்கள் மீது நடவடிக்கையும், தானமாக கொடுக்கப்பட்ட இடத்தினை மீட்குமாறும் மற்றும் தனது பணியினை செய்ய தவறிய அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

| கட்டிட வரிசை எண். | சென்னை மாநகராட்சி தீர்மான எண் / நாள் | திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி எண். | தான ஆவணத்தின் எண். மற்றும் சார்பதிவாளர் அலுவலகம் |
|---|---|---|---|
| 1. | 650/2020–18.09.2020 | PPA/WDCN05/01721/2020 | 2034/2020 இராயபுரம் |
| 2. | 772/2020–13.10.2020 | PPA/WDCN05/01723/2020 | 875/2020 சௌகார்பேட்டை |
| 3. | 876/2020–31.10.2020 | D1/SD/WDCN05/0374/2020 | 319/2021 இராயபுரம் |
| 4. | 928/2020–16.11.2020 | PPA/WDCN05/04915/2020 | 1155/2020 திருவல்லிக்கேணி |
| 5. | 459/2021 –06.05.2021 | PPA/WDCN05/00017/2021 | 1921/2021 இராயபுரம் |
| 6. | 591/2021 –25.07.2021 | PPA/WDCN05/01156/2021 | 1108/2021 சௌகார்பேட்டை |
| 7. | 592/2021 –25.07.2021 | PPA/WDCN05/01152/2021 | 2320/2021 இராயபுரம் |
| 8. | 853/2021 – 25.11.2021 | PPA/WDCN05/07812/2021 | 22/2022 சௌகார்பேட்டை |
| 9. | 913/2021 – 18.12.2021 | PPA/WDCN05/08108/2021 | 212/2022 இராயபுரம் |

பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயரில் தான ஆவணங்கள் இருந்தபோதும், தானமாக பெற்ற இடத்தினை பெருநகர சென்னை மாநகராட்சியின் பெயரில் பட்டாவை 30.7.2022 வரையில் மாற்றாமல் அதிகாரிகள் செயல்படுகின்றனர் என்று தெரிவித்துள்ளார்.

**மேற்கண்ட புகார் மனு மீது 11.8.2022 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 5ன் செயற் பொறியாளரிடம் அறிக்கை கோரப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி செயற் பொறியாளர் தன்னுடைய 1.9.2023 நாளிட்ட அறிக்கையில்:–**

மனுதாரர் தனது மனுவில் மண்டலம்-5, வார்டு 49 முதல் 63 வரை உள்ள சாலை விரிவாக்கத்திற்காக தானமாக பெறப்பட்ட இடங்களில் ஆக்கிரமிப்பு இருப்பதாகவும், மேலும் 9 கட்டிடங்களின் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி சென்னை மாநகராட்சி மன்ற தீர்மான எண் மற்றும் தான ஆவணத்தின் எண் மற்றும் சார் பதிவாளர் அலுவலக ஆவண எண் விபரங்கள் தெரிவித்துள்ளார்கள். மனுவில் தெரிவித்துள்ள கட்டிடங்கள் வார்டு 49, 52, 57 மற்றும் 63ஐ சார்ந்ததாகும். சம்மந்தப்பட்ட வார்டு பொறியாளர்கள் கள ஆய்வு மேற்கொண்டு அவர்கள் அளித்த அறிக்கை கீழ்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>கட்டிட வரிசை எண் – 1 :–</u> கட்டிட உரிமையாளர் கதவு எண்.121/182, ஜி.ஏ. சாலை பழைய வண்ணாரப்பேட்டையில் காலி மனையில் மனை பிரிக்கப்பட்டு தலைமையிடத்தில் அனுமதி அளிக்கப்பட்டது. இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின்

விதிகளின்படி கட்டிட உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 57.74 ச.மீ. பெறப்பட்ட தான பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது. தானமாக பெற்ற இடம் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**கட்டிட வரிசை எண்.2 :-** கட்டிட உரிமையாளர் கதவு எண்.169/32 ஜி.ஏ. சாலை பழைய வண்ணாரப்பேட்டையில் காலி மனையில் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு மனு அளித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார். இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி கட்டிட உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 27.30 ச.மீ. பெறப்பட்ட தான பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி **பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது.** கட்டிட உரிமையாளர் கட்டிட பணிகளை தொடங்கவில்லை. தானமாக பெற்ற இடம் **ஆக்கிரமிப்பு செய்யவில்லை** என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**கட்டிட வரிசை எண்.3:** கட்டிட உரிமையாளர் கதவு எண்.28/90, தாண்டவராயன் கிராமணி தெரு, தண்டையார்பேட்டையில் கட்டிடம் தகர்ப்பு மற்றும் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு மனு அளித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார். இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி கட்டிட உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 124.56 ச.மீ பெறப்பட்ட தானப் பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி **பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது.** கட்டிட உரிமையாளர் கட்டிட பணிகளை தொடங்கப்படவில்லை தானமாக பெற்ற **இடம் ஆக்கிரமிப்பு செய்யவில்லை** என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**கட்டிட வரிசை எண்.4 :-** கட்டிட உரிமையாளர் கதவு எண்.122/143, ஜி.ஏ. சாலை பழைய வண்ணாரப்பேட்டையில் காலி மனையில் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு மனு அளித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார். இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி கட்டிட உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 18.30 ச.மீ பெறப்பட்ட தானப் பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி **பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது.** கட்டிட உரிமையாளர் கட்டிட பணிகளை தொடங்கப்படவில்லை தானமாக பெற்ற இடம் **ஆக்கிரமிப்பு செய்யவில்லை** என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**கட்டிட வரிசை எண்.5 :-** கட்டிட உரிமையாளர் கட்டிட எண்.120/170, மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம் காலி மனையில் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு மனு அளித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார். இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி கட்டிட உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 30.40 ச.மீ பெறப்பட்ட தானப் பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு **இவ்விடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.** கட்டிட உரிமையாளர் கட்டிட பணிகள் தொடங்கி முடிக்கப்பட்டுள்ளது.

**கட்டிட வரிசை எண்.6 :-** கட்டிட உரிமையாளர் கதவு எண்.11/13, இரமணன் தெரு, வ.உ.சி. நகர், கட்டிட தகர்ப்பு மற்றும் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு மனு அளித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார். இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி கட்டிட

உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 11.80 ச.மீ பெறப்பட்ட தானப் பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு **இவ்விடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.** கட்டிட உரிமையாளர் கட்டிட பணிகள் தொடங்கி முடிக்கப்பட்டுள்ளது.

**<u>கட்டிட வரிசை எண்.7 :-</u>** கட்டிட உரிமையாளர் கதவு எண்.391/252, மின்ட் தெரு, சௌகார்பேட்டை கட்டிட தகர்ப்பு மற்றும் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு மனு அளித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார். இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி கட்டிட உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 24.82 ச.மீ பெறப்பட்ட தானப் பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு **இவ்விடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.** கட்டிட உரிமையாளர் கட்டிட பணிகள் தொடங்கி முடிக்கப்பட்டுள்ளது.

**<u>கட்டிட வரிசை எண்.8 :-</u>** கட்டிட உரிமையாளர் கதவு எண்.160/140, பிரகாசம் சாலை, பிராட்வே, காலி மனையில் கட்டிடம் கட்டுவதற்கு மனு அளித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார். இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி கட்டிட உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 27.28 ச.மீ பெறப்பட்ட தானப் பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு **இவ்விடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.** கட்டிட உரிமையாளர் கட்டிட பணிகள் தொடங்கி நடைபெற்று வருகிறது.

**<u>கட்டிட வரிசை எண்.9 :-</u>** கட்டிட உரிமையாளர் கதவு எண்.324/244, பாரதி சாலை, இராயப்பேட்டை காலி மனையில் புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு மனு அளித்து கட்டிட அனுமதி பெற்றுள்ளார். இரண்டாவது குழுமத்தின் திட்டத்தின்படி சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி கட்டிட உரிமையாளர் சாலை விரிவாக்கத்திற்காக தேவைப்படும் நிலத்தினை தானப் பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அளித்திருந்தார். தேவைப்படும் நிலத்தின் பரப்பளவு 10.43 ச.மீ பெறப்பட்ட தானப் பத்திரத்தின் அடிப்படையில் பெருநகர சென்னை மாநகராட்சி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய தாலுகா அலுவலகத்தில் விண்ணப்பிக்கப்பட்டு **இவ்விடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமானது என அறிவிப்பு பலகை வைக்கப்பட்டுள்ளது.** கட்டிட உரிமையாளர் கட்டிட பணிகள் தொடங்கி முடிக்கப்பட்டுள்ளது.

எனவே இது குறித்து சமர்ப்பிக்கப்படுவது யாதெனில் மனுதாரர் குறிப்பிட்ட கட்டிடங்கள் அனைத்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தானமாக பெறப்பட்ட இடத்தில் ஆக்கிரமிப்பு எதுவும் இல்லை. மேலும் தானமாக பெறப்பட்ட இடத்தில் அறிவிப்பு பலகை அமைக்கப்பட்டது. பட்டா பெயர் மாற்றம் செய்யப்படாத மீதமுள்ள தானப் பத்திரங்கள் மீது பட்டா பெறுவதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்."

**3) மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 04.09.2023 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

மனுதாரர் 04.09.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார் :

பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5ல் புதிய கட்டட அனுமதி பெற்ற கட்டட உரிமையாளர்கள் தாங்கள் தானமாக கொடுத்த சாலை விரிவாக்கத்திற்கான இடத்தை ஆக்கிரமித்து மாநகராட்சி கட்டட அனுமதிக்கு மாறாகவும், விதிகளை மீறியும் கட்டடம் கட்டியுள்ளனர். இது குறித்து மாநகராட்சியில் புகார் மனுக்கள் அளித்தும் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை. தானமாக பெறப்பட்ட இடத்தை மாநகராட்சி அலுவலர்கள் சுவாதீனம் எடுக்கவில்லை. எனவே, மண்டலம் 5ல் ஆக்கிரமிப்பாளர் ஆக்கிரமித்துள்ள மாநகராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்ட நிலங்களை மீட்டிடவும், அவ்வாறு தானமாக பெறப்பட்ட இடங்களில் "மேற்கண்ட இடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தம்" என்கின்ற வாசகம் அடங்கிய பெயர் பலகையை அமைத்திடவும் ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**எதிர்மனுதாரரான பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ன் செயற்பொறியாளர் 4.9.2023 அன்றைய விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:**

"மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட 9 இடங்களில் 4 இடங்களுக்கு மாநகராட்சியின் பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது. மீதமுள்ள 5 இடங்களுக்கு மாநகராட்சி பெயரில் பட்டா பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட பட்டா பெறுவதில் ஒரு வருட காலம், கால தாமதம் ஏற்பட்டுள்ளது என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு மேற்கண்ட இடங்களில் எவ்வித ஆக்கிரமிப்பும் இல்லை எனவும், தானமாக பெறப்பட்டுள்ள இடங்களில் பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட பெயர் பலகை இல்லாத இடங்களில், பெயர் பலகைகளை மாநகராட்சியால் வைக்கப்படும் எனவும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்."

மேலும் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 5 அவர்களின் 1.9.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் மனு, வாக்குமூலம், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ன் செயற்பொறியாளரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் அறிய முடிகிறது.**

மனுதாரர் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் கோட்டம் 49 முதல் 63 வரையிலான புதிய கட்டிட அனுமதி பெற்ற கட்டிட உரிமையாளர்கள் தாங்கள் தானமாக கொடுத்த சாலை விரிவாக்கத்திற்கான இடத்தை ஆக்கிரமித்தும் மீதமுள்ள இடத்தில் பெருநகர மாநகராட்சி கட்டிட அனுதிக்கு மாறாக வரன்முறை மீறி மற்றும் விதிகளை மீறியும் கட்டிடம் கட்டியுள்ளதாகவும் இது பற்றி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு புகார் மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை

என்று கூறி, தன் மனு மீது உரிய நடவடிக்கையும், கடமை தவறிய அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்ட 9 இடங்களில் 4 இடங்களுக்கு மாநகராட்சி பெயரில் பட்டா பெறப்பட்டுள்ளது என்றும் மீதமுள்ள 5 இடங்களுக்கு பெருநகர மாநகராட்சியின் பெயரில் பட்டா பெற விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்றும், பட்டா பெற ஒரு வருடம் கால தாமதம் ஏற்பட்டது என்றும், மேற்கண்ட தானமாக வழங்கப்பட்ட 9 இடங்களிலும் ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை எனவும் அவ்விடங்களில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பாக "இவ்விடம் சென்னை மாநகராட்சிக்கு சொந்தம்" என்ற பெயர் பலகை வைக்கப்பட்டுள்ளது என்றும், பெயர் பலகை இல்லாத இடங்களில் பெயர் பலகை வைக்கப்படும் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் -5ன் செயற்பொறியாளர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

<u>தானமாக கொடுக்கப்பட்ட 9 இடங்களில் பட்டா மாற்றம் செய்யப்படாத 5 இடங்கள்</u>

| வரிசை எண். | தானம் அளித்தவரின் முகவரி | தானமாக அளிக்கப்பட்ட பரப்பளவு | பெருநகர சென்னை மாநகராட்சி அனுமதி அளிக்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1. | கதவு எண்.120/170, மன்னார்சாமி கோவில் தெரு, இராயபுரம் | பரப்பளவு 30.40 ச.மீ. | தீர்மான எண். 650/2020 நாள்:18.9.2020 |
| 2. | கதவு எண்.11/13, இரமணன் தெரு, வ.உ.சி. நகர். | பரப்பளவு 11.80 ச.மீ. | தீர்மான எண். 772/2020 நாள்:13.10.2020 |
| 3. | கதவு எண்.391/252 மிண்ட் தெரு, சௌகார்பேட்டை. | பரப்பளவு 24.82 ச.மீ | தீர்மான எண். 853/2021 நாள்:25.11.2021 |
| 4. | கதவு எண். 160/140, பிரகாசம் சாலை, பிராட்வே. | பரப்பளவு 27.28 ச.மீ. | தீர்மான எண். 591/2021 நாள்:25.07.2021 |
| 5. | கதவு எண்.324/44, பாரதி சாலை, இராயப்பேட்டை | பரப்பளவு 10.43 ச.மீ. | தீர்மான எண். 928/2020 நாள்:16.11.2020 |

மேற்கண்ட 5 இடங்கள் கட்டிட உரிமையாளர்களால் பெருநகர சென்னை மாநகராட்சியில் தானமாக அளிக்கப்பட்டு, இந்நாள்வரை பட்டா பெயர் மாற்றம் செய்யப்படவில்லை என்று பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் மண்டல அலுவலரின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

மேற்கண்ட இடங்களை 2020 மற்றும் 2021 தானமாக பெறப்பட்டு இன்றுவரை பட்டா மாற்றம் செய்யாமல் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் <u>அலுவலர்கள் மெத்தனமாக இருப்பது</u> குறித்து இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் - 5ல் மேற்குறிப்பிட்ட தானமாக பெறப்பட்ட 5 இடங்களுக்கு விரைந்து பட்டா மாற்றம் பெற உரிய நடவடிக்கை எடுக்குமாறும் பெயர் பலகை இல்லாத இடங்களில் மாநகராட்சிக்கு சொந்தமானது என்று பெயர் பலகை உடனடியாக வைக்கவும், அவ்வாறு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து இம்முறைமன்றத்துக்கு 45 தினங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-5ன் மண்டல அலுவலருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது. மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து மண்டலங்களிலும் இதுபோன்று மாநகராட்சிக்கு தானமாக அளிக்கப்பட்ட இடங்களை அந்தந்த மண்டல கள அலுவலர்களை கொண்டு கள ஆய்வு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்யப்படாத அனைத்து இடங்களையும் கண்டறிந்து, மாநகராட்சி பெயரில் உரிய பெயர்

மாற்றம் செய்திட, தேவையான நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து மண்டலங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறு பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 12–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. S. திருஞானம்,
புதிய எண்.51, பழைய எண்.81,
திருப்பள்ளி தெரு, சௌகார்பேட்டை,
சென்னை – 600 001.

2) அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையாளர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

3) மண்டல அலுவலர்,
மண்டலம் – 5, பெருநகர சென்னை மாநகராட்சி,
62, பேசின் பிரிட்ஜ் சாலை, பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை – 600 021.

4) துணை ஆணையர் (பணிகள்)
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.
} To ensure the implementation of this order

5) அரசு முதன்மை செயலர்
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,
தலைமைச் செயலம்,
சென்னை – 600 009.

6) கண்காணிப்பு பொறியாளர்,
மழைநீர் வடிகால்துறை,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை – 600 003.

**நகல்:** மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்